


திருவாசகம் - 39, 40

# திருப்புலம்பல் கதைவழியில்
# குலாப்பத்து கதைவழியில்

கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# திருப்புலம்பலம் கதை வடிவில்

## சிவானந்த முதிர்வு

## திருவாரூரில் அருளியது

**பூங்கமலத் தயனெடுமால் அறியாத நெறியானே**

**கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறாவெண் ணீறாடி**

**ஓங்கெயில்சூழ் திருவாரூர் உடையானே அடியேன்நின்**

**பூங்கழல்கள் அவையல்லா தெவையாதும் புகழேனே.** **01**

''சிவனே, உமையவளின் மணாளனே, திருமேனி முழுவதும் நீறு பூசியவனே, திருவாரூரின் தலைவனே, உன்னை அடைவதற்கு உற்ற உபாயம் பற்றுக்களை அகற்றுதல் என்று அயனும் மாலும் கூட அறியமாட்டார்கள். அத்தகைய அதீதப் பொருளான உன்னைப் போற்றுகிறேன்'' என்று மாணிக்கவாசகர் புலம்புகிறார். அயனும் மாலும் அல்ல. உன்னால் படைக்கப்பட்ட உயிர்கள் எல்லாம் பற்றுக்களை அகற்றாமையால் தான் துன்பப்படுகின்றனர். பற்றுக்களை எப்படி அகற்றுவதென்று தேவர்களுக்கே புரிவதில்லை. அப்படியிருக்கையில் கீழான மனிதர்களால் எப்படிப் பற்றுக்களை நீக்க முடியும். எந்தத் தொல்லைகளும் வேண்டாமென்று எல்லாவற்றையும் விலக்கிவிட்டு உன்னைத் தஞ்சமடைந்தேன். பெரும் இன்பத்தைப் பெற்றேன். முதல் ஏழையாக இருந்த காலத்தில் அனுபவிக்க முடியாத துன்பங்களையெல்லாம் அனுபவித்தேன். ஆனால் மனம் வருந்தவில்லை. உன்னை வணங்கியபின் பணம் வந்தது, பொருள் வந்தது, கல்வி வந்தது, புகழும் வந்தது. இவற்றால் அளவுக்கதிகமான துன்பங்களும் வந்து சேர்ந்துள்ளன. உன்னை நிம்மதியாக வணங்க முடியவில்லை. போற்றிப் புகழ முடியவில்லை. இதுதானா உலகம்…? எனக்குப் புரியவில்லை. முன்னைய நிலையைவிட இப்போது நூறுமடங்கு துன்பப்படுகிறேன். இத்துன்பங்களை நீக்குவது எப்படி? எம்மை மதிக்காதவர்களை மதித்ததால் நன்மைகள் வருமென்று நினைத்தால், துன்பங்களுக்கு மேல் துன்பங்கள் தான் வருகின்றன. அதீதப் பொருளான உன்னை மகிழ்வுடனும், நிம்மதியாகவும் வணங்குவதற்கு அருளினால் போதும்'' என்று வாய்விட்டுக்கூறி அழுதான் நடராசா.

**சடையானே தழலாட தயங்குமு விலைச்சூலப்**

**படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை விடையானே**

**விரிபொழில்சூழ் பெருந்துறையாய் அடியேன்நான்**

**உடையானே உனையல்லா துறுதுணை மற் றறியேனே. 02**

''சடை வளர்த்த அண்ணலே, தணலைக் கையில் வைத்திருக்கும் சூலப் பெருமானே, எருது வாகனத்தில் பவனி வருபவனே, நீ தான் எனக்குக் கதி'' என்று மாணிக்கவாசகர் உனது சந்நிதியில் இருந்து புலம்புகிறார். அதுபோல நானும் உனது சந்நிதியில் இருந்து புலம்புகிறேன். இனத்தவர்கள், நண்பர்கள், சுற்றத்தவர்கள் என்றிருப்போர் முன்பு நாம் கஷ்டப்பட்டவர்கள் என்பதால் எம்மோடு உறவுகொள்ளத் தயங்கினர். இப்போது நாம் தகுதியில் உயர்ந்ததும் வெறுத்தவர்கள் தம் சுயநலனுக்காக எம்மோடு சேர விரும்புகின்றனர். அதனால் துன்பங்கள் பலவும் வந்து சேர்ந்து விட்டன. இத்துன்பங்களை நீக்க வழிதெரியாது தடுமாறுகின்றேன். இடப வாகனனே, நீ தான் துன்பப்பட்டவர்களுக்குப் பாகுபாடு காட்டாது உதவுவோன் என்று உலகில் உள்ளோர் கூறுகின்றனர். அது உண்மையென்று எனக்கு நீ முன்பு உணர்த்தினாய். இருந்தும் உனதருளால் பெற்ற கல்வியால் என்னைப் பலரும் விரும்பி நலமடைய நினைக்கின்றனர். இதனால் தடுமாறுகிறேன். உன்னை நிம்மதியாக வணங்க முடியவில்லை. அதற்கு ஒரு வழிசெய். என்னால் இனியும் துன்பங்களைத் தாங்க முடியாது. எனது மனம் துன்பங்களால் சோர்ந்துவிட்டது. அதை உற்சாகப்படுத்து'' என்று இரந்தான் நடராசா.

**உற்றாறை யான்வேண்டேன் ஊர்வேண்டேன்**

**பேர்வேண்டேன் கற்றாறை யான்வேண்டேன் கற்பனவும்**

**இனியமையும் குற்றாலத் தமர்ந்துறையுங் கசிந்துருக கூத்தா உன்**

**குரைகழற்கே கற்றாவின் மனம்போலக் கசிந்துருக**

**வேண்டுவனே. 03**

நடராசாவால் எதையும் நினைக்க முடியவில்லை. காலையில் வந்த மகாலிங்கம் சொன்னார்; ''உனது மாமா பெரும் தனவந்தர். அவர்களின் பிள்ளைகளைத் திருமணம் செய்யப் பலர் காத்திருக்கின்றனர். உனது அம்மா கெஞ்சிக் கேட்டமைக்காகத் தான் அவர் தனது மகளுக்கு உன்னைச் செய்யச் சம்மதித்தார்.

அதை நினைத்துப் பெருமைப்படு. நீ பெரும் உத்தியோகத்தனாகலாம். ஆனால் உனது தந்தையும் தாயும் கூலிக்காரர் தானே. அதனால் அவரது மதிப்பு, மரியாதை குறைவடையும். அதைச் சிந்திக்காது உன்னை விரும்புவதற்குக் காரணம் இரத்த பாசம் தான்...'' மகாலிங்கம் கதைத்துக் கொண்டிருந்தார். நடராசாவுக்கு ஆத்திரமாக இருந்தது. இரத்த பாசம் நான் நல்லநிலைக்கு வந்தபின்புதான் வந்தது. முன்பு வரவில்லையே. அத்துடன் அர்ச்சகா வாய்காரி, திமிர் பிடிச்சவள். அம்மாவை மாமி என்று கருதாது வேலைக்காரி என்று நினைப்பவள். தனது தாயின் சகோதரனின் மகனான வாகீசனை விரும்பி அவனுக்குக் கடிதங்கள் எழுதியவள். அவன் விரும்பாது அவளது கடிதங்களைப் பிறருக்கு காட்டியவன். அதனால் பல பிரச்சினைகள் உருவாகின. இப்போது இரு குடும்பத்தினரும் பேசுவதில்லை. அப்படியான பெண்ணா சிறந்தவள்..?" என்று மகாலிங்கத்தைக் கேட்க வேண்டும் போல ஆத்திரம் வந்தது. பின் சிவனிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டு நான் முடிவெடுக்கக்கூடாது என்று நினைத்து அமைதியாக இருந்தான்.

மகாலிங்கம் பேசிக் கொண்டிருந்தார். "அருமையான இடம். உனக்கு என்னென்ன தேவையென்று சொல். மோட்டார் வண்டி வேண்டுமா…? பெறுமதியான சங்கிலி வேண்டுமா…? காணி, பூமி, தோட்டம் வேண்டுமா..? என்ன வேண்டும் என்று சொன்னவுடனே பெற்றுத் தருகிறேன்"

பலமுறை கேட்டும் நடராசா பதில் சொல்லாததால் மகாலிங்கம்; "கெட்டுப் போறன் பந்தயம் பிடி என்று நினைப்பவனை எதுவும் செய்ய முடியாது. யோசித்துச் சொல்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

நடராசா அவர் சென்றதும் சிவனை வணங்கக் கைகூப்பக் காசிநாதன் வந்தான். அவன் நடராசாவுடன் படித்தவன், "நடா, அகல்யா முன்பு எம்மோடு படிக்கும்போது உன்னைக் கேலி செய்வதையே விருப்பாகக் கொண்டிருந்தவள். நேற்று என்னைத் தேடிவந்து தான் உன்னைக் காதலிக்கிறாளாம். உன்னோடு சிரித்துக் கதைத்தால் அது பெரும் பிரச்சினையைத் தருமென்று நினைத்து அவ்வாறு நடந்தவளாம். அதை மன்னித்துத் தன்னைத் திருமணம் செய்யம்படி கேட்கச் சொன்னாள். அவரின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்கிறேன் என்றும் சொன்னாள். அவளைப் பார்க்கப் பாவமாக இருக்கு. நல்ல அழகி. பெரும் பணக்காரி. வலிய வருகிறாள். அவளைச் செய்யடா.." என்றபோது, "இப்போ என்னைச் சிவனை வணங்கவிடு. அடுத்த வாரம் பரீட்சை இருக்கு" என்றதும் காசிநாதன் சென்று விட்டான்.

‘சிவனே, உறவினர், ஊர், பேர், கல்வி முதலியவற்றின் பற்றுக்கள் எனக்கு வேண்டாம். கன்றின் மேல் தாய்ப்பசு வைத்திருக்கும் பற்றைப்போல நான் உன்னிடத்தில் பற்று வைக்க வேண்டும்” என்று மாணிக்கவாசக சுவாமிகள் புலம்புவதுபோல நானும் புலம்புகின்றேன். இன்றுள்ளநிலையில் உன்னால் தான் எனக்கொரு ஆறுதலைத்தர முடியும். உறவினர்கள், நண்பர்கள், பிறர் எல்லோரும் காரணமின்றி என்மீது பற்று வைக்கமாட்டார். நான் கற்ற கல்வியின்மீது அவர்கள் என்னைவிடப் பற்றுக் கொண்டு என்னைத் துன்புறுத்துகின்றனர், என்னைக் காப்பாற்று” என்று அழுதான் நடராசா.

*திருச்சிற்றம்பலம்.*

உ

சிவமயம்

# குலாப்பத்து கதை வடிவில்

## அனுபவம் இடையீடு படாமை

## தில்லையில் அருளியது

**ஓடுங் கவந்தியுமே உறவென்றிட் டுள்கசிந்து**

**தேடும் பொருளுஞ் சிவன்கழலே எனத்தெளிந்து**

**கூடும் உயிரும் குமண்டையிடக் குனித்தடியேன்**

**ஆடுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 01**

அர்ச்சகாவின் தந்தை தர்மலிங்கம் கதிரேசனது வீட்டுக்கு வந்தார். அவருடன் மகாலிங்கமும் வந்தார். இருவரும் கதிரேசனது வீட்டு முற்றத்தில் நின்ற வேப்பமர நிழலில் இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தனர். கதிரேசன் சிவபூசையை முடித்துக்கொண்டு வெளியே வந்தார்.

கதிரேசன் அங்கிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்தார். அவர் வெகுநேரம் பேசாததால் தர்மலிங்கம் சொன்னார்; "நான், நடராசா எனது மகளைத் திருமணம் செய்வான் என்று நம்பியிருந்தேன். அவன் கதிரவேற்பிள்ளையின் மகள் அகல்யாவை விரும்புவதாக ஊரார் பேசுகிறார்கள். இது உண்மையா…? அவன் உங்களது வார்த்தைகளை வேதவாக்காக நினைத்து வாழ்பவன். அதனால் அவனுக்கு விபரமாக எடுத்துச் சொல்லுங்கள்" என்றார்.

"அண்ணை, நீங்கள் நினைத்தால் இந்தக் கலியாணத்தைச் செய்து வைக்கலாம். மனதை வையுங்கள்" என்றார் மகாலிங்கம்.

அப்போதும் கதிரேசன் பேசவில்லை. யோசித்துக் கொண்டிருந்தார். பின்பு "மாணிக்கவாசக சுவாமிகள் திருவோடும், கோவணமும் தான் தனது உடைமை என்கிறார். அத்துடன் சிவனை அடைவதுதான் தனது குறிக்கோள் என்கிறார். அத்துடன் உடலிலும் உயிரிலும் ஆனந்தத்தைத் தருகின்ற தில்லை நடராசனைப் போற்றுவதே எனது வாழ்வின் அர்த்தமாகும்" என்று சொல்கிறார். இப்போ அந்த நிலைக்கு நான் வந்து விட்டேன். சிவனைத் தவிர வேறு எவையும் எனது நினைவில் இல்லை. பொது

விடயங்கள், கோவில் விடயங்கள் யாவற்றையும் கைவிட்டு விட்டு நானும் மனைவியும் ஆச்சிரமத்திற்குச் செல்லப் போகிறோம். ஊர்ப் பிரச்சினைகளில் தலையிடுவதால் எனது மகிழ்ச்சியும் நிம்மதியும் போய்விட்டன. ஒரு நிமிடம் மகிழ்வுடன் மனதை அடக்கித் தில்லை நடராசனை வணங்க முடியவில்லை. அதனால் சிவனுக்கும் எனக்கும் இடையே இடைவெளி அதிகரித்துக்கொண்டு போகிறது. நீயும் சொல்கிறாய், கதிரவேற்பிள்ளையும் சொல்கிறான். யாரின் சொல்லை நான் கேட்பது. அத்துடன் நடராசா தான் யாரையும் திருமணம் செய்ய மாட்டேன் என்கிறான். இவற்றைச் சிந்தித்துச் சிந்தித்து மனம் துன்பப்படுகிறது. என்னை நிம்மதியாகச் சிவனை வணங்கவிடுங்கள். எல்லாப் பற்றுக்களையும் அறுத்துவிட்டுத் திருவோட்டை உடைமையாகவும், கோவணத்தை உடையாகவும் ஏற்று விட்டேன். இனி யாரும் என்னிடம் வராதீர்கள்" என்றார் கதிரேசன்.

**துடியேர் இடுகிடைத் தூய்மொழியார் தோள்நசையால்**

**செடியேறு தீமைகள் எத்தனையுஞ் செய்திடினும்**

**முடியேன் பிறவேன் எனைத்தனதாள் முயங்குவித்த**

**அடியேன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 02**

"தர்மலிங்கம், உலகிற்கு எடுத்துக்காட்டாக, உத்தம புருஷராக வாழ்ந்தவர் மாணிக்கவாசக சுவாமிகள். அவர் பாடிய திருவாசகம் மக்களின் துன்பங்களை நீக்கி அவர்களை மேம்படுகிறது. இதை யாரும் அறிவதில்லை. அறியவும் முயல்வதில்லை. வாய்ப்பாட்டைப் பாடமாக்குவதுபோலத் திருவாசகத்தையும் பாடமாக்கிக் காலையில் படிக்கின்றனர். அவர்களில் எத்தனை பேருக்கு அதன் பொருள் தெரியும். உண்மை தெரியும். தத்துவம் தெரியும். எதையும் அறியமுற்படாது கடவுளை வணங்குகின்றோம் என்று நினைக்கின்றனர். திருவாசகம் பாடி, சிவனை வணங்குபவன் சிவனைத் தவிர வேறு எதையும் நினைக்கக்கூடாது. சாதாரண பக்தர்களைச் சிவபக்தர்களாக மாற்றவேண்டிய கடமையும் அவர்களுக்குண்டு. அதைத்தான் நான் செய்து வந்தேன். துன்பப்படுபவர்களுக்குச் சிவனின் பெருமைகளை எடுத்துக்கூறி அவர்களைச் சிவனை வணங்கும்படி செய்து, அவர்களது துன்பங்களைப் போக்கும்படி மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகின்றார். அதனால் தான் நான் நடராசனுக்குச் சிவனை அறிமுகம் செய்தேன். அத்துடன் எனது விடயம் முடிவடைந்துவிட்டது. கூலிக்கு நெல் விதைக்கச் சென்றவன் தனக்கு ஒப்படைத்த வேலையைச் செய்ய வேண்டுமே தவிர வயலின் எல்லைகளைப் பற்றிப் பேசலாகாது. யாராவது சிவனைப் பற்றி அறிய வேண்டுமானால் சொல்லுங்கள். இரவிரவாகச் சொல்கிறேன். ஏனைய விடயங்களில் தலையிடச்

சொல்லாதீர்கள். அதனால் எனது சிவநினைவு குழம்புகிறது. "காமம், குரோதம், பழிவாங்கல் போன்ற பற்றுக்களால் பல கொடுமைகளைச் செய்திருந்தாலும், எனக்குப் பிறப்பும் இல்லை. ஏனென்றால் நான் தில்லைநடராசனைப் பற்றியுள்ளேன்" என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். அவரின் சொற்படி பிறப்பிறப்பைத் தவிர்க்கும் தில்லை நடராசனைச் சதா காலமும் வணங்கப்போகிறேன். என்னைத் தொல்லைப் படுத்தாதீர்கள்" என்றார் கதிரேசன்.

**என்புள் ளுருக்கி இருவினையை ஈடழித்துத்**

**துன்பங் களைந்து துவந்துவங்கள் தூய்மைசெய்து**

**முன்புள்ள வற்றை முழுதழிய உள்புகுத்த**

**அன்பின் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 03**

"மகாலிங்கம், சிவனை எப்போதும் நினைத்திருத்தலும், வணங்குதலும், போற்றிப் புகழ்தலும் செய்தாலும் மனம் அடங்குதல் வேண்டும். ஒரு விடயத்தில் அக்கறைப்பட்டோமேயானால் சிறிய பற்று மனதில் புகுந்து பெரிய மலையாகிவிடும். இதனால் மனம் தூய்மையடையாது. "தெய்வீகமான நடுநிலையில் மனதை வைத்திருப்பவர்களுக்குப் பரஞானம் உண்டாகி உடல் தூயதாகிறது. பிராப்த கன்மத்தின் வேகம் தணிகிறது. துன்பம் அற்றுப் போகிறது. இருமைகள் அதாவது குளிர் - வெப்பம், வெற்றி – தோல்வி, இலாபம் - நட்டம் என்னும் இருமைகள் மனதைச் சுத்தப்படுத்துகின்றன. ஆகாமிய சஞ்சித கன்மங்கள் அழிந்து போகின்றன" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகின்றார். இதைத்தான் நானும் விரும்புகின்றேன். சிவனடியார்களுக்கு உதவல், சிவத்தொண்டு செய்தல், சிவனைப் பற்றித் தெரியாதவர்களுக்குத் தெரிவித்தல் போன்ற பாவமில்லாத செயல்களைச் செய்வதுதான் மெய்யடியார்களது முக்கிய கடமை. அதை விலக்கி வேறேதும் செய்தால் அதில் பற்று உண்டாகி விடும். ஒரு சிவனடியான் அறியாமை காரணமாகச் சிவப்பழியைச் செய்யப் போகிறான் என்று தெரிந்தால் அதைத் தடுத்து உண்மை நிலையை விளக்குதல் வேண்டும். அதைத்தான் நாயன்மார்கள் செய்தனர். நடராசன் மிக மோசமான துன்பங்களை அனுபவித்தான். அவனுக்குச் சிவனின் பெருமைகளை எடுத்துக்கூற அவன் அதை நம்பிச் செயற்பட்டான். அவனது துன்பங்கள் சிவனருளால் நீங்கின. இனி அவன் சிவனோடு கலந்துரையாடித் தனது பிரச்சினைகளைத் தீர்க்கட்டும். சிவன் இப்போ அவனது விருப்புக்குரியவனாகி விட்டார். எதையும் பேசலாம், எதையும் செய்யலாம்" என்றார் கதிரேசன்.

**குறியும் நெறியும் குணமுமிலார் குழாங்கள்தமைப்**

**பிரியும் மனத்தார் பிரிவரிய பெற்றியனைச்**

**செறியுங் கருத்தில் உருத்தமுதாஞ் சிவபதத்தை**

**அறியுங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 04**

"மகாலிங்கம், நீ சிவபக்தன் என்று நினைத்துத்தான் இதைச் சொல்கிறேன். உலகப் பற்று உடையவர்களுடன் சிவபக்தர்கள் இணங்கிப் போவலதில்லை. சிவன் நல்லவர் கெட்டவர் என்று பாராது எல்லோரினது உள்ளத்திலும் எப்போதும் நீக்கமற வீற்றிருக்கிறார். எனினும் சிவபோதத்தை வளர்க்கும் மெய்யடியார்களின் உள்ளத்திலேயே அவருடைய சொரூபம் அமிர்தமாகித் தித்தித்துப் பேரானந்தத்தைக் கொடுக்கிறது" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். இது உண்மையான கூற்று. அந்த நிலையில் உள்ள சிவனடியார்களுக்கு விருப்பு, வெறுப்பு, உயர்ந்தவர், தாழ்ந்தவர், உறவினர், பகைவர் என்ற எண்ணம் தோன்றாது. அவர்களுக்குக் கற்களும் பொன்கட்டிகளும் ஒன்றாகவே தெரியும். இந்நிலையை அடையத்தான் சிவனடியார்கள் விரும்புவார்கள். சிவனடியார்களான நீயும் நானும் இந்நிலையில்தான் இருத்தல் வேண்டும். நடராசா சிவபக்தன் என்ற காரணத்தால் அவனை வழிநடத்த வேண்டிய பொறுப்பைச் சிவன் எனக்குத் தந்தான். அப்பொறுப்பு நல்லமுறையில் முடிவடைந்து விட்டது. இனி அவனும் சிவனும் சேர்ந்து முடிவெடுக்கட்டும். சிவனை வணங்கும்போது எல்லோரும் நலமாகவும், இன்பமாகவும், துன்பங்களின்றியும் வாழவேண்டும் என்று பிரார்த்திப்பது முறை. நாடு வளம்பெற மழை பெய்ய வேண்டும். பயிர்கள் நல்ல விளைச்சலைத் தரவேண்டும். மக்களுக்கு நோய்கள் வரக்கூடாது என்று வணங்குவதால் பற்றுக்கள் ஏற்படாது. நடராசாவுக்கு அர்ச்சகாவைத் திருமணம் செய்துவை என்று நீயோ நானோ வேண்டினால் அது பெரும் பற்றாகிவிடும். அதைப் பெற்றார் செய்யட்டும். நடராசன் செய்யட்டும். நீ சிவனடியானாக இருந்தால் அப்படிப் பேசக்கூடாது" என்றார் கதிரேசன்.

**பேருங் குணமும் பிணிப்புறும்இப் பிறவிதனைத்**

**தூரும் பரிசு துரிசறுத்துத் தொண்ட ரெல்லாஞ்**

**சேரும் வகையாற் சிவன்கருணைத் தேன்பருகி**

**ஆருங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 05**

"நான் பிழை செய்து விட்டேன் என்பதை இப்போது தான் உணர்கிறேன். தர்மலிங்கம் எனது இரத்த உறவினன். முன்பு நான் அவனுடன் மிகவும் நெருக்கமாகப்

பழகியதால் அவன் வந்து கேட்டதும் எதையும் யோசிக்காது கதைத்து விட்டேன். செயலிலும் இறங்கிவிட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கதிரேசனின் பாதங்களைப் பணிந்த மகாலிங்கம், தர்மலிங்கத்தைப் பார்த்துச் சொன்னான்; "இரத்த பாசம் என் மனதில் பற்றை உண்டாக்கிவிட்டது. மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; "நாமரூபம், முக்குணம், மனப்பற்று ஆகிய விகாரங்களைத் திருத்தியமைத்து சீவபோதம் என்னும் குற்றத்தைக் களைந்த தொண்டர்கள் தான் சிவானந்த போதத்தில் திளைப்பர்" என்று அதைத்தான் நான் விரும்புகிறேன். சில தினங்களுக்கு முன் நான் நடராசனைச் சந்தித்து உங்களது மகளைத் திருமணம் செய்யும்படி வற்புறுத்தினேன். அவன் எதுவும் பேசாததால் எனக்குக் கோபம் வந்தது. அடிக்கக்கூட நினைத்தேன். இப்போது நினைக்கையில் அது மகாதவறென்று தெரிகிறது. ஒவ்வொரு பிரச்சினைகளின் போதும் சிவன் எம்மைச் சோதிக்கிறார் என்றுணராது நாம் தான் உரிமையுடையவர், தலைவர் என்று நினைப்பதால் அழிக்கப்பட்ட பற்றுக்கள் வீரியத்துடன் மேலோங்கி எமது அறிவை மறைக்கின்றன. அந்த அறியாமையைப் போக்கவே முடியாதா...?" என்று கவலைப்பட்டார் மகாலிங்கம்.

"எல்லாம் சிவன் செயல் என்று நினை. ஒரு செயலைச் செய்யுமுன் சிவனைப் பற்றின்றித் தொழு. உனது பிரச்சினைக்கான முடிவை அவர் உனக்குள் ஏற்படுத்துவார். இல்லாவிட்டால் தீர்க்கக்கூடியவரின் தொடர்பை உண்டாக்குவார்" என்று கதிரேசன் கூறுவதைக் கேட்டுத் தர்மலிங்கம் ஆடிப்போனார். நடராசனோடு உறவு கொள்ள இருந்த ஒரே ஒருவரான மகாலிங்கத்தையும் கதிரேசன் கெடுத்து விட்டார். இனிக் கதிரேசனின் வார்த்தைகளை மீறி மகாலிங்கம் நடக்க மாட்டான் என்று நினைக்க அவருக்குக் கவலையாக இருந்தது.

**கொம்பில் அரும்பாய்க் குவிமலராய்க் காயாகி**

**வம்பு பழுத்துடலம் மாண்டிங்ஙன் போகாமே**

**நம்புமென் சிந்தை நணுகும்வண்ணம் நானணுகும்**

**அம்பொன் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 06**

"மகாலிங்கம், மரத்தில் பூத்துக் காய்த்த காய் ஒன்று. வெம்பிப் பழுத்துப் பயனில்லாது வீணாவது போன்று, நான் உலகில் வீணாகப் பிறந்து, வளர்ந்து இறத்தல் ஒவ்வாத காரியம். சிவனைச் சார்ந்து நான் சிவானுபவம் பெற வேண்டும்" என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். இது அவர் தனக்காகச் சொல்லவில்லை.

ஊர்மக்களுக்காகச் சொல்கிறார். மரம் பூப்பூக்கிறது. பின் காயாகியும் கனியாகிறது. அதற்கு முன் அக்காய் வெம்பி விழுமானால் அது யாருக்கும் பயன்படாது. பழுத்தபழம் உயிர்கள் எல்லாவற்றிற்கும் உடலை வளர்க்க உதவுகிறது. அதுபோல மனிதர்களும் வாழவேண்டும் என்பது தான் சிவனது நோக்கம் என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகின்றார். மனிதரைப் பொறுத்தளவில் சிறுசிறு விடயங்களுக்குக்கூடக் கோபங் கொண்டு உறவைப் பிரிக்கின்றனர். சகோதரர்களுக்குள்ளேயே யார் பெரியவர் என்ற போட்டி மனப்பாங்குண்டு. அதனால்தான் சண்டைகள், சச்சரவுகள் வந்து பிரிகின்றனர். சகோதரம் ஒன்றோடொன்று கதைக்க முடியாது. இன்னொருவரின் துணையை நாடுகிறது. இதுவே உலக இயல்பாகிவிட்டது. மனிதன் ஏனைய உயிர்களுக்கு உதவ வேண்டும். கோபதாபம் பாராது சிவனை வணங்கிச் சிவானுபவம் பெறவேண்டும். அப்படிப் பெறுபவர்கள் தான் வாழும்போதும் வாழ்வு முடிந்த பின்பும் இன்பமாக வாழ்வர். அதைத்தான் நான் விரும்புகின்றேன். இனிமேல் யாரும் என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள். நான் வெம்பிப் பழுத்த பழமாக மாறமாட்டேன்" என்றார் கதிரேசன்.

**மதிக்குந் திறனுடைய வல்லரக்கன் தோள்நெரிய**

**மிதக்குந் திருவடி என் தலைமேல் வீற்றிருப்பக்**

**கதிக்கும் பசுபாசம் ஒன்றுமிலோம் எனக்களித்திங்**

**கதிரக்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 07**

"மகாலிங்கம் பெருஞ் சிவபக்தனானாலும் கர்வம் கொள்ளலாகாது. கர்வம் சிவபக்தியை முழுமையாக அழித்துவிடும். இராவணனைப்போல ஒரு சிறந்த சிவபக்தன் உலகில் இல்லை. அவனது சிவபக்தியை உலகில் உள்ள உயிர்கள் யாவும் அறிந்து போற்றின. அத்தகைய சிவபக்தனும் பலசாலியுமான இராவணன் சிவனும் உமையும் வீற்றிருக்கும் கயிலை மலையைத் தனது தாய் வணங்குவதற்காகத் தூக்கிச் செல்ல முயன்றபோது சிவனது பாதம் அவனது தோளை நசுக்கியது. இராவணனை நசித்த சிவனின் பாதம் எனது தலையில் பதிந்து விட்டது. அதனால் இராவணனைப்போல் பெரும் கொடுமைகள் செய்து கொண்டிருந்த பசு பாசம் அழிந்தது. அதனால் பேரானந்தப்பட்டு நான் பரமனோடு ஒன்றுபட்டேன் என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார். இந்தப் பாசம் எதையும் ஆராயும் நிலையில் இல்லாதது. அது ஆணவத்துக்குக் கட்டுப்பட்டுப் பாவங்கள் அனைத்தையும் செய்விக்கும் வல்லமை உள்ளது. அதுதான் இப்போது தர்மலிங்கத்தை ஆட்கொண்டு செயல்புரிய வைக்கிறது. அது பாவம் பழி, நீதி நியாயத்தைப் பார்ப்பதில்லை. தான் நினைத்தது தான்

நீதியென்று நினைத்துக் கொடுமைகள் பலவற்றையும் செய்விக்கிறது. அதை ஒழிக்காவிட்டால் நிம்மதியிராது. பிறப்புக்கள் தொடர்ந்து துன்பத்தையே உண்டாக்கும். நாம் பிறந்த இப்பிறவியில் எவ்வளவு துன்பங்களை அனுபவிக்கிறோம். இவை யாரால் எப்படி வருகின்றன என்று ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்பதில்லை. நன்றும் தீதும் பிறர் தருவதில்லை. எம்மால் எமக்குக் கொடுக்கப்படுகின்றன என்ற உண்மையை உணரும் வரை யாருக்கும் நிம்மதி கிடைக்காது. இன்பம் கிடைக்காது. அதனால் தான் நான் யாரின் விடயங்களிலும் தலையிடுவதில்லை. நடராசா, தர்மலிங்கத்தின் சகோதரியின் மகன். இருவரும் உறவினர்கள். அன்போடு பழகியிருந்தால் இருவரும் கதைக்கலாம். நல்ல முடிவை எடுக்கலாம். இருவரும் அன்புடன் பழகாமையால் தான் அடுத்தவரை நாடவேண்டி உள்ளது" என்றார் கதிரேசன்.

**இடக்குங் கருமுருட் டேனப்பின் கானகத்தே**

**நடக்குந் திருவடி என்தலைமேல் நட்டமையால்**

**கடக்குந் திறல்ஐவர் கண்டகர்தம் வல்லாட்டை**

**அடக்குங் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 08**

மகாலிங்கமும் தர்மலிங்கமும் சென்றுவிட்டனர். கதிரேசன் வேப்பமரநிழலில் அமர்ந்திருந்தார். குளிர்காற்று அவரின் உடலை வருடிவிட அந்த சுகம் அவரைச் சிவனை நினைக்கச் செய்தது. அப்போது நடராசன் வந்தான். "தாத்தா நான் எதையும் சிந்திப்பதில்லை. சிந்திக்கப் போவதும் இல்லை. நீங்கள் எனக்கு வழிகாட்டியாக இருந்து சிவனைக் காட்டினீர்கள். சிவனை வணங்கத் தொடங்கிய பின்பு பிறரை ஏன் நான் நம்பவேண்டும். இன்று காலை சிவனது சந்நிதியில் திருவாசகம் ஒன்றைப் பாடினேன். அதில் மாணிக்கவாசகர் "காட்டில் தவம் செய்த மிகச் சிறந்த சிவபக்தனான அர்ச்சுனனை அரக்கன் ஒருவன் கொல்வதற்காகப் பன்றி உருவில் வந்தபோது, சிவன் அதைத் தடுக்க வேடனின் உருவில் சென்றார். அவர் காட்டில் நடந்து சென்றபோது இவரது பாதங்கள் எனது தலையின் மீது பட்டன. அதனால் ஐம்பொறிகளின் அகங்காரங்களும் அடங்கி ஒடுங்கிவிட்டன." என்கிறார். இப்போது உலகில் வாழும் மனிதர்களில் பலர் அவையெல்லாம் கட்டுக்கதைகள் என்கின்றனர். ஒருவனது உணர்வுகள் எதை நாடுகின்றனவோ அதையே மனம் நம்பும். நான் சிவனை நம்புவதால் அர்ச்சுனனுக்கு அரக்கனால் ஆபத்து வந்தபோது சிவன் வேட வடிவில் காட்டில் நடந்து சென்றதை முழுமையாக நம்புகிறேன். அதனால் எனக்கும் இங்குள்ள அரக்கத்தனமானவர்களால் ஆபத்து வந்தால் சிவன் வந்து காப்பான் என்ற நம்பிக்கை

உண்டு. நான் பணமில்லாமையால் கற்றலை விட முடிவெடுத்தபோது சிவன் உங்களின் உருவில் வந்து உதவியது போல இன்னும் உதவுவான்” என்றான்.

“மிகவும் மகிழ்ச்சி மகனே, இந்த நிலை மிகவும் உச்சமானது. சிவனுக்கும் உனக்கும் இடையே நெருக்கம் ஏற்பட்டுவிட்டது. இனி எந்த அரக்கனாலும் உன்னைத் துன்புறுத்த முடியாது என்றார்” கதிரேசன்.

**பாழ்ச்செய் விளாவிப் பயனிலியாய்க கிடப்பேற்குக்**

**கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டுத்**

**தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென் புன்தலையால்**

**ஆட்செய் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 09**

“மாணிக்கவாசகரின் திருவாசகம் ஓர் அருமையான மனிதனை மேம்பாடு அடையச் செய்யும் நூல். இதை யாரும் புரிந்து கொள்வதில்லை. முதலில் அதை நம்பினால் தான் அதன் அருமை தெரியும். மிகமிகக் கொடிய துன்பங்களை அனுபவித்தவனுக்குத்தான் சிவானுபவம் புரியும். மற்றவர்கள் கட்டுக்கதை என்பார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவது போல; “பொட்டல் நிலத்தில் நடப்பட்ட செடியைப் போல நிலவுலகில் பிறந்து மிகுந்த துன்பமடைந்தேன். சிவனுடன் எனக்கு உண்டான தொடர்பு முற்பிறப்பில் செய்த தவத்தின் பயனாகக் கிடைத்தது. அது புதையலைப் போன்றது. அவனது தாமரைப்பூ போன்ற திருவடிகளுக்கு நான் தலையால் தொண்டு செய்வேன்” என்கிறார். அவர் சொல்வது போலத்தான் எனது வாழ்வும் இருந்தது. மிகவும் வறுமையான பெற்றோருக்கு நான் பிறந்தமையால் உணவு கூட நேரத்திற்குக் கிடைத்ததில்லை. கிடைத்தால் உண்ண வேண்டிய நிலை. அதனால் தான் அகல்யாவின் வீட்டில் வேலை செய்தேன். அவள் எதற்காக என்னை அவமதித்தாள் என்று தெரியாது. தினமும் நரகத்தில் வாழ்ந்தேன். அந்த நேரம் பெரும் புதையல் கிடைத்தது போல எனக்கு உங்களின் உதவி கிடைத்தது. நீங்கள் என்னைச் சிவனோடு சேர்த்து வைத்தீர்கள். அடுத்தடுத்துப் பல இன்பங்கள் என்னை நாடி வந்தன. அதற்காக நான் அவனுக்கு என் வாழ்நாள் முழுவதும் தலையால் தொண்டு செய்ய வேண்டும். இது எனது கடமை. இப்போது நான் மிக மகிழ்வுடன் இருக்கிறேன். மிகவும் திறமையாக பரீட்சையை எழுதியுள்ளேன். சிவனின் அருள் இருக்கும் வரை எதிலும் எனக்குக் குறை ஏற்படமாட்டாது” என்றார் நடராசா.

**கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்**

**செம்மை மனத்தால் திருப்பிணகள் செய்வேனுக்கு**

**இம்மை தரும்பயன் இத்தனையும் ஈங்கொழிக்கும்**

**அம்மை குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. 10**

"அம்பிகை சமேதனுக்கு முழுமனதோடு நான் சேவை செய்தமையால் எனது இருவினைப் பயன்களையும் ஒழிந்து போயின. நான் முத்தியடைந்துள்ளேன்" என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். அதைப் படித்த பின் அம்பிகை சமேதனான சிவனுக்கு நான் என்னாலான சேவைகளைச் செய்து வருகிறேன். அதனால் இப்போது கொடுமைகள் பலவற்றையும் ஆராயாது எமக்குச் செய்த மாமாவின் மீது வெறுப்பும் வரவில்லை விருப்பும் வரவில்லை. அது எனது முன்வினை என்ற நினைப்பே வருகிறது. அகல்யா எனது நண்பனான வாகீசனைத் தூது அனுப்புகிறாள். அவன் வந்து அகல்யாவைப் பற்றி உயர்வாகக் கூறுகிறான். அதனால் அவள் மீது விருப்போ வெறுப்போ ஏற்படவில்லை. முன்பென்றால் அகல்யா என்ற பெயரைக் கேட்டால் இரத்தம் கொதிக்கும். தகாத வார்த்தைகளை நா பேசும். இப்போ அப்படியல்ல. அதை வாகீசன் தவறாகப் புரிந்து அதை அகல்யாவிடம் கூறியுள்ளான். நான் அமைதியானது தன் மீதுள்ள காதலால் என்று இருக்கும் நினைக்கின்றனர். பற்றுக்கள் அகன்று விருப்பு வெறுப்பற்று வாழ்கிறேன். சிவனின் சித்தம் எதுவோ அதுதான் நடக்கும். இனி ஒருத்தி எனக்காகப் பிறக்கப் போவதில்லை. அது அகல்யா வா இல்லை. அர்ச்சகா வா இல்லை. இன்னொருத்தியா என்று சிவன் முடிவெடுக்கட்டும். அம்முடிவை நான் மகிழ்வுடன் ஏற்பேன்" என்றான் நடராசா.

*திருச்சிற்றம்பலம்.*